**காலி மரபுரிமை மன்றம் - 2014**

---

காலி மரபுரிமை மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் காலி மரபுரிமை மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள்

அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் காலி மரபுரிமை மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 420,074 மிகையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,824,939 ஆகும். அதன் படி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,245,013 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்காக அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட மானியம் ரூபா 2.6 மில்லியனாலும் வாடகை வருமானம் ரூபா 1.7 மில்லியனாலும் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

2011 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்ட பெண் ஊழியர் ஒருவரை சேவையிலிருந்து அகற்றியதன் பின்னர் சேவையில் அமர்த்துமாறு கோரி 87/2012 ஆம் இலக்கத்தின் கீழ் காலி தொழில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கின் வழக்குக் கட்டணமாக மன்றத்தின் மூலம் ரூபா 60,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன்

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழக்குக்கான தீர்ப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி காலி கோட்டையில் அமைந்துள்ள ‘‘முன் பெஸ்டியன் கலரி’’ 2014 இன் இறுதிக் காலாண்டில் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கலரியில் சித்திரம் மற்றும் சிற்பங்களை தாபிக்கும் நடவடிக்கை 2015 மார்ச் வரையிலும் முடிவடைந்திருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட தற்போது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்குள்ளாகிய ரூபா 943,682 கிரயமான இயந்திரமும் உபகரணங்களும் மற்றும் அலுவலக உபகரணங்களின் கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களின் பெறுமதி கணக்குகளில் காணப்பட்ட போதும் அப்பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலி மரபுரிமை மன்றத்தில் அமைந்துள்ள அலுவலகம் மாதமொன்றிக்கு ரூபா 30,000 படி வாடகைக்கு காலி கோட்டையிலிருந்து 02 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தனியார் கட்டிடமொன்றிக்கு 2012 திசெம்பர் 03 ஆந் திகதி முதல் கொண்டு செல்லப்பட்டமையால் ஆண்டொன்றிக்கு ரூபா 360,000 வாடகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மன்றம் தாபிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட மன்றத்தின் நோக்கத்தை திறைவேற்றுவதற்கு இது தடையாக இருந்தமை முன்னைய ஆண்டின் அறிக்கைகளிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொருத்தமான

அலுவலகச் சூழலொன்றை காலிக் கோட்டையில் ஆரம்பிப்பதற்கு 2015 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ‘‘தேசத்திற்கு மகுடம்’’ கண்காட்சிக்காக மன்றத்தினால் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,298,565 தொகை மீண்டெழும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த செலவினத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 328 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் உபசரிப்பு நடவடிக்கைகளுக்கான செலவினம் ரூபா 104,211 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் இச் செலவினம் ரூபா 66,545 ஆக இருந்தது. அதன் படி 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டின் செலவினம் 56 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஆண்டின் இறுதியின் போது நடைபெற்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 72,500 தொகை செலவிடப்பட்டமை இந்த செலவினம் உயர்வடைந்தமைக்கான பிரதான காரணமாக இருந்தது.

**4.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 4,340,950 தொகை செலவில் பாதுகாக்கப்பட்ட காலிக் கோட்டையில் சந்தன அரண் யுத்த அறையில் மீளாய்வாண்டின் போது கண்காட்சி மேடையொன்றை தாபிப்பதற்காக தேவையான படங்கள் மற்றும் சித்திரங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,700,000 தொகை தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிற்பங்கள் மற்றும் சித்திர வடிவமைப்பு தொடர்பாக தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கும் காலி மரபுரிமைகள் மன்றத்திற்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் முதலாவது நிபந்தனையின் படி ஒரு சிற்பத்திற்கு ரூபா 95,000 படி 16 சிற்பங்கள் ‘‘தரமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி’’ வடிவமைக்கப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தரத்திற்குரிய மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 235,000 தொகையான பிணைப் பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் மொத்தக் கிரயம் ரூபா 1,520,000 தொகையான சித்திரங்களின் நியமத் தன்மை தொடர்பாக நிபுணத்துவரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆயுத அறையைப் பாதுகாப்பதற்கும் சித்திரங்களையும் சிற்பங்களையும் வடிவமைப்பதற்காகவும் மன்றத்தால் ரூபா 9 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இதன் சந்தன அரணின் எதிர்கால பராமரிப்பு நடவடிக்கைகள், சித்திரங்களினதும் சிற்பங்களினதும் பாதுகாப்பு மற்றும் வருமான உழைப்பின் எதிர்ப்பார்ப்புக்களை வெற்றியடையச் செய்தல் போன்ற விடயங்களுக்குரிய தெளிவான திட்டமொன்று 2015 மார்ச் மாதம் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) டைட்டன் பாதுகாப்பு அரணில் அமைந்துள்ள யுத்த அறையினைப் பாதுகாப்பதற்கான மதிப்பீட்டுத் தொகையான ரூபா 1.7 மில்லியனில் ரூபா 1.4 மில்லியன் தொகையான வேலைப் பகுதி மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மதிப்பீட்டிற்குப் புறம்பாக ரூபா 2.1 மில்லியன் செலவில் கண்காட்சிக் கொட்டகை அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு வழங்கப்பட்ட காரணத்தால் தற்போது அதன் வரலாற்றுப் பெறுமதிக்கு சேதமேற்பட்டிருந்தது.

(இ) காலிக் கோட்டை தகவல் நிலையக் கட்டிடத்தை திருத்துவதற்காக

காலிக் கோட்டை பவுற சமூர்த்தி படையணியுடன் 2014 சனவரி 28 ஆந் திகதி மன்றத்தால் ரூபா 1,996,479 தொகையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. கோட்டை பவுற சமூர்த்தி படையணியால் ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட வேலைகளில் எவ்வளவு மேற்கொள்ளப்பட்டது என உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான மேற்கொள்ளப்பட்ட வேலை அறிக்கை/ அளவிடைப் பத்திரம் அல்லது பட்டியல் என்பன பெறப்படாமல் மன்றத்தால் 20 சதவீத முற்பணத் தொகையுடன் ரூபா 699,295 கூட்டுத்தொகையானது சமூர்த்திப் படையணிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 தாமதமாகிய செயற்திட்டம்

சுற்றுலாப் பயணிகளுக்கு காலிக் கோட்டையின் அழகை கடலில் இருந்து இரசிப்பதற்காக தனியார் துறையுடன் ஒருங்கிணைந்து படகுச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு 2011 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்று தெரிவுசெய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு காலிக் கோட்டையில் அமைந்துள்ள துறைமுக அதிகாரசபைக்குரிய பழைய இறங்குதுறைக்கு அருகில் படகை நிறுத்தும் முறையில் பழைய இறங்குதுறை மற்றும் அதனைச்சுற்றி அமைப்பதற்காக காலிக் கோட்டை பவுற சமூர்த்தி படையணிக்கு ரூபா 500,000 இற்கு கையளிக்கப்பட்ட ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் மாதம் வரையிலும் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

காலி மரபுரிமை மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆக இருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்வாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆகும். 05 செயற்திட்ட உதவியாளர் பதவியில் 03 உம், 04 முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 02 உம், 04 பாதுகாப்புக் காப்பாளர்கள் பதவியில் 02 உம், செயற்திட்ட உதவியாளர் (கணக்கு) பதவி என்பன வெற்றிடங்களாக உள்ளன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2005 சனவரி 27 ஆந் திகதிய பீ்எடீ 27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி, கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் காலி மரபுரிமை மன்றம் நிதிக்கூற்றுக்களை 2015 மார்ச் 16 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தது.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய செயற்திட்டம் மற்றும் பிரதான செயற்பாடுகள் தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்பட்டிருக்காததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) செலவினக் கட்டுப்பாடு

(இ) கொள்வனவு நடைமுறைகள்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்